# சீஷிங் (Shixing)

**வசிப்பிடம்:** கி.பி. 1983 ன் ஓர் அறிக்கையின்படி 2,000 சீஷிங் மொழி பேசும் மக்கள் சீனாவின் சிசுவான் மாநிலத்தின் தென்பகுதியில் மூளி மாவட்டத்தில் ஷுய்லுே (Shui Luo) நதி மற்றும் அதன் கிளை நதியான சொங்தியன் (Chongtian) நதியோரங்களிலும் வசிக்கின்றனர்.

இந்த இனம் உலகில் மிகவும் தனிமைப்படுத்தப்பட்ட இனங்களின் மத்தியில் ஓர் இனமாகும். ஒரு ஜெப உதவி கையேடு இவ்வாறு கூறுகிறது 'இவர்கள் சங்துவிலிருந்து (Chengdu) ஆறு நாட்கள் நடைத் தொலைவில் வாழ்கின்றனர். இவர்கள் மத்தியில் சென்ற வெளிநாட்டவர்கள், மொழியியலாளர்கள் மற்றும் அனுபவம் மிகுந்த மலை ஏறுபவர்கள் மட்டுமே... ஆய்வு செய்யும்படி செல்லும் சிலர் மூளி நகரத்திலிருந்து செல்கின்றனர். மோசமான சாலையில் ஒரு நாள் பேருந்து பிரயாணம் செய்து, இரண்டு நாட்கள் குதிரை மேலும், நடந்தும் பிரயாணம் செய்து அங்குச் சென்றடைய முடியும்.' சீஷிங் கிராமத்தை அடையப் பயன்படுத்தப்படும் நடைபாதைகள் 4,680 மீ. (15,000 அடிகள்) வரை உயருகின்றன. அநேக ஆண்டுகளுக்கு முன் இப்பகுதிக்குச் சென்ற ஒருவர் இப்பகுதியின் பூகோள அமைப்பைப் பற்றி இவ்வாறு கூறுகிறார்: 'நாங்கள் குளிர்ந்த காடுகளைக் கடந்த சில மணிநேரங்களிலேயே 100F டிகிரி வெப்பநிலை நிலவும் பகுதிக்குச் சென்றபோது ஷௌசு (Shou Chu) பள்ளத்தாக்குகளில் மூச்சுத்திணறச் செய்யும் வெப்பத்தைக் கண்டோம்... பல வடிவமைப்புகளைக் கொண்ட திறம்பட நெய்யப்பட்ட கம்பளத்தை விரித்ததைப்போலக் காட்சியளிக்கும் காட்டுப் பூக்களையும் (anemones, blue poppies and primroses) கண்டோம்'




**அடையாளம்:** சீஷிங்கின் பொருள் "இரும்பு மக்கள்" என்பதாகும். இவர்களுடைய அண்டையர்களான வடக்கத்திய பூமிக்கள்(Pumi), இவர்களை ஷுமி (Xumi) அல்லது ஷுமு (sumo) என்று அழைக்கிறார்கள்.

**மொழி:** சீஷிங் மொழி ஷியங் துணைப் பிரிவைச் சேர்ந்திருப்பது இந்நாட்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கி.பி. 1930 ல் ஜோசப் ராக் இப்பகுதிக்குச் சென்றபோது, இவர்கள் மொழியைப்பற்றி இவ்வாறு கூறினார் 'இது நாஷி, திபெத்தியன் மற்றும் ஷிபான் மொழியின் கலப்பைப்போலத் தெரிகிறது; இருந்தும் இம்மூன்று இனங்களில் யாராலும் இதைப் புரிந்துகொள்ள முடிவதில்லை.'

**வரலாறு:** சீஷிங் மக்கள் வசிக்கும் பகுதிக்கு நீண்ட மற்றும் செழிப்பான வரலாறு உண்டு. இவர்கள் கிராமங்கள் சக்திவாய்ந்த நாஷி ராஜாக்களால் அநேக நூற்றாண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட காவல் கோபுரங்களால் பாதுகாக்கப்பட்டுள்ளன.' நாஷிகளின் கவனம் இப்பகுதியில் இருந்ததற்குக் காரணம் ஒருகாலத்தில் ஷுய்லுே நதியில் கிடைத்த தங்கமாக இருந்திருக்கக்கூடும். சக்திவாய்ந்த நாஷி ராஜா மூதியன் வங் (Mutien Wang) இந்நதியில் விரிவான சுரங்கங்கள் வெட்டினார்.

**பழக்கவழக்கங்கள்:** நதியை நோக்கி கீழ்புறமாகச் சரியும் சிறு நிலப்பகுதிகளில் அரிசி மற்றும் மக்காச்சோளம் சாகுபடி செய்துகொண்டு சீஷிங்கள் ஒரு தனிமையான வாழ்க்கை நடத்துகின்றார்கள். இவர்கள் கிராமங்கள் குடிசைகளை ஒன்றோடொன்று இணைத்துக் கட்டி உருவாக்கப்பட்ட வட்ட வடிவத்தில் வித்தியாசமாக உள்ளன. குடிசைகளின் மேற்புறம் தட்டையாக உள்ளதால், ஒரு வீட்டின் மேலிருந்து மற்றொரு வீடாக முழுக் கிராமத்தையும் வீட்டின்மீது நடந்தே சுற்ற முடியும்.

**மதம்:** சீஷிங்கள் திபெத்திய புத்த மத்தைப் பின்பற்றுகின்றார்கள், அநேக நூற்றாண்டுகளுக்கு முன் இவர்கள் இம்மதத்திற்கு மாற்றப்பட்டனர். அநேகருடைய வீட்டிற்குமுன் "ஓம் மணி பத்மே ஹூம்" என்னும் திபெத்திய மந்திரம் வெட்டப்பட்ட மணிக் கற்களின் குவியலைக் காணமுடியும். இந்த மந்திரத்தின் பொருள் "தாமரைப்பூவின் மணியைத் (மணிக்கல்) துதி" என்பதாகும். ஆதி நாட்களில் சீஷிங்கள் வடக்கத்திய பூமி ராஜா மற்றும் அவருடைய மதகுருக்களின் ஆளுகைக்கு உட்பட்டு வாழ்ந்தனர்.

**கிறிஸ்துவம்:** சிசுவானின் மூளி மாவட்டம், உலகின் சுவிசேஷம் புறக்கணிக்கப்பட்ட பகுதிகளில் முக்கியமான ஒன்றாகும். எந்த ஒரு மிஷனெரியும் இப்பகுதியில் பணிசெய்ததாகத் தகவலில்லை. அறியப்பட்ட சபையோ கிறிஸ்தவர்களோ இவர்கள் மத்தியில் இல்லை. இவர்களுக்கு அருகாமையில் உள்ள கிறிஸ்தவர்கள் யுன்னான் மாநிலத்தின் குறைந்த எண்ணிக்கையுடைய சிறுபான்மை கிறிஸ்தவர்களே, ஆனாலும்கூட இவர்களும் இந்த மிக மறைவான பகுதியிலிருந்து தொலைதூரத்தில் வாழ்கின்றார்கள்.




**Population:**
2,780 (2000)
3,430 (2010)
4,200 (2020)
**Countries:** China
**Buddhism:** Tibetan
**Christians:** none known

## மேலோட்டம்:

**மற்ற பெயர்கள்:** Shihing, Shuhin, Xumi, Shishing, Sumu

**மக்கள்தொகை:** 2,000 in China (1983, SunHongkai)

**மொழிப்பிரிவு:** சீன-திபெத்திய, திபெத்திய-பர்மிய, தன்குத்-ஷியாங். ஷியங் மொழி

**மொழி வழக்குகள்:** 0

**திபெத்திய புத்தமதம்:** 100%

**கிறிஸ்துவம்:** 0%

**வேதாகமம்:** இல்லை

**இயேசு திரைப்படம்:**இல்லை

**சுவிசேஷ ஒலிப்பதிவுகள்:** இல்லை

**கிறிஸ்தவ அலைபரப்புகள்:** இல்லை

ROPAL **குறியீடு** : SXG

**கிறிஸ்துவத்தின் நிலை**




- சுவிசேஷத்தைக் கேட்டிராதவர்கள்
- சுவிசேஷத்தைக் கேட்டும் இரட்சிக்கப்படாதவர்கள்
- ஏதாவது ஒரு கிறிஸ்துவப் பிரிவைப் பின்பற்றுபவர்கள்